## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 132/2014 | Date : 24.01.2024 | DW1 |
|---|---|---|
| Name: நல்லதம்பி | S/o. **செங்கோடன்** | |
| Evidence Recorded Time: 12.11 P.M. to 12.45 P.M | | |

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். நான் கடைசி வரை கிரைய ஆவணத்தில் சொல்லியுள்ள உயிலை பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிரைய ஆவணத்தில் உயிலை குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. கடைசியாக உயிலை எப்போது பார்த்தேன் என்றால் இதுவரை உயிலை பார்க்கவில்லை, சென்ற வாய்தாவில்தான் உயிலை முதன் முதலில் பார்த்தேன். இந்த வழக்கில் பதில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பதிலில் சொல்லியுள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பொன்னுசாமி, சசிக்குமார், நான் மூவரும் சேர்ந்து கிரையம் வாங்கியதாக கூறியுள்ள நிலையில் மற்ற இருவரும் உயிலை பார்த்தார்களா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நாங்கள் மூவரும் கூட்டாக நிலம் வாங்கி விற்கி தொழில் செய்து வருகிறோம் என்றால் இல்லை, மூவரும் சேர்ந்துதான் நிலத்தை சொந்தத்திற்கு வாங்கினோம். மீதி இருவரான பொன்னுசாமி, சசிக்குமார் ஆகியோரிடம் உயிலை பார்த்துள்ளார்களா என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. எங்கள் மூவரும், கோசலை, சரவணன், லட்சுமி, ஜானகி ஆகியோர்கள் சேர்ந்து உயிலை போலியாக தயார் செய்ததாக சி.சி.135/2014 என்ற குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ல் நடைபெற்று வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கை வழக்கறிஞர் மூலம் நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் சென்ற வாய்தாவில் வழக்கிற்கு வருவதற்கு முன்பு வரை உயிலை பெற்று பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. உயிலை பார்க்கவில்லை என்று கூறியுள்ளேன் என்னுடைய பிரமாண பத்திரத்தில் உயிலை பற்றி கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் உயிலை பார்க்காமல் தான் அது பற்றிய சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உயில் பார்த்த பிறகாவது உயிலை யார் யாருக்கு எழுதிக்கொடுத்தார்கள் என்றும்,

என்னென்ன சர்வே எண்களில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கிரைய ஆவணத்தில் சொல்லியுள்ள உயில் கோசலை அவரது அம்மாவை கட்டாயப்படுத்தி அவர் அம்மாவின் விருப்பம் இல்லாமல் எழுதி வாங்கியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவசரகதியில் அமராவதிக்கு விருப்பம் இல்லாமல் உயில் எழுதியதால்தான் அதில் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் ஆகியவை தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பின்னிட்டு நான் சசிக்குமார், பொன்னுசாமி, நான், கோசலை, கோசலையின் மகன், மகள்கள் சேர்ந்து பதிவு செய்யப்பட்ட உயிலில் சர்வே எண், பட்டா எண், விஸ்தீரணம் ஆகியவற்றை திருத்தம் செய்து போலியாக நாங்கள் கிரையம் பெற்றுள்ளோம் என்றாலும் அதனால்தான் உயிலை பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் உண்மையில் கிரையம் பெற்றிருந்தால் அதற்கான மூல ஆவணத்தை சரிபார்த்திருப்பேன் என்றாலும், நான் போலியாக கிரையம் பெற்றதால் தான் மூல ஆவணத்தை சரிபார்க்கவில்லை என்றாலும் சரியல்ல, நான் மூல ஆவணங்களை பார்த்து தான் கிரையம் பெற்றேன். மூல ஆவணங்களாக கோசலை பெயரில் உள்ள பட்டா, அ பதிவேடு ஆகியவற்றை பார்த்துதான் கிரையம் பெற்றேன். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் கிரையம் பெற்ற சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கோசலையின் அம்மா அமராவதி பெயரில் இருந்ததை தெரிந்து கொண்டேன். அமராவதி பெயரில் இருந்த ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அமராவதிக்கு கோசலையை தவிர வேறு வாரிசுகள் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அமராவதியின் மற்ற வாரிசுளை உள்ளடக்கி கிரையம் பெற்றேனா என்றால் இல்லை. அமராவதி பெயரில் இருந்து எதன் அடிப்படையில் கோசலையின் பெயருக்கு மாறியது என தெரிந்து கொண்டேனா என்றால் உயிலின் அடிப்படையில் மாறியிருப்பதாக சொன்னார்கள். கோசலையின் பெயருக்கு உயிலின் அடிப்படையில் மாறியிருப்பதை எப்போது தெரிந்து கொண்டேன் என்றால் வழக்கிற்கு பிறகு போன வாய்தாவில்தான் தெரிந்து கொண்டேன். சாட்சி தற்போது 2001–ம் ஆண்டிலேயே உயில் அடிப்படையில் கோசலை பெயருக்கு மாறியதை தெரிந்து கொண்டதாக கூறுகிறார். மேற்படி விவரத்தை 2011–ம்

ஆண்டில்தான் சொன்னார்கள். அப்போது நான் உயிலை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. உயில் போலியானது என்பதால்தான் நான் முன்னுப்பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உயில் பதிவு செய்யப்பட்ட பின்பு அதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதால் அந்த உயில் செல்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பதிவு செய்யப்பட்ட உயிலை மோசடியாக திருத்தி மோசடி உயில் மூலம் நாங்கள் பெற்ற கிரைய பத்திரமும் செல்லாது என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் உள்ள கிரைய ஆவணம் வாதிகளின் உரிமையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் அசல் வழக்கு எண்.219/2013 வழக்கை மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன். மேற்படி வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கோரி என்ன சர்வே எண்ணில் என்ன சொத்து விவரம் குறித்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. உயிலில் எத்தனை அயிட்ட சொத்து சொல்லப்பட்டுள்ளது என்று தெரிந்து கொண்டேனா என்றால் இரண்டு அயிட்ட சொத்துக்கள் உள்ளதை சென்ற வாய்தாவில்தான் தெரிந்து கொண்டேன். பிரமாண பத்திரத்தில் உயில் பற்றி சொல்லியுள்ள விவரங்கள் சர்வே எண், விஸ்தீரணம், கிராமம் ஆகியவை தெரியாமல் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கோசலை வகையறாவினருக்கும், அப்பு வகையறாவினருக்கும் எவ்வளவு நாட்களாக பேச்சு வார்த்தை இல்லை என்றால் அதுபற்றி தெரியாது. அவர்களுக்குள் வரவு செலவு உள்ளதா என்றால் தெரியாது. என்னுடைய பிரமாண அசல் வழக்கு எண்.163/2014 வழக்கை மேட்டுர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளேன். மேற்படி வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கோரி என்ன சர்வே எண்ணில் என்ன சொத்து விவரம் குறித்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் தெரியாது. இந்த வழக்கு, குற்றவியல் நீதிமன்றத்தில் நடக்கும் வழக்கை தவிர கோசலை வகையறாவினருக்கும், அப்பு வகையறாவினருக்கும் இடையே நடக்கும் மற்ற வழக்குகள் பற்றி தெரியாது என்றால் சரிதான். அப்புவின் மனைவி பெயர் 5ம் வாதி சங்குபதி மற்றும் மகன் 6ம் வாதி வீரராஜ் என்று தெரிந்து கொண்டேனா என்றால் சென்ற வாய்தாவில்தான் தெரிந்து கொண்டேன். அப்புவிற்கு மேற்படி சங்குபதியும், வீரராஜ் இருவரும்தான் வாரிசுகள் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் போது அப்பு, பாப்பாத்தி, மணிமேகலை, சசிக்குமார் ஆகியோர்தான் தாக்கல் செய்தார்கள்

என்றால் சரிதான். அப்பு இறந்த பிறகுதான் அவருடைய மனைவியும், மகனும் மனு தாக்கல் செய்து தரப்பினராக வந்துள்ளார்கள் என்றால் சரிதான். அப்புவிற்கு வரும் சொத்து அவருடைய மனைவி மகனுக்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து கொளத்தூர் கிராமம், சிங்கிரிபட்டி கிராமம் என இரண்டு சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். வழக்கில் முதல் அயிட்ட சொத்தான வீடு ஆதியில் அமராவதிக்கும், தாண்டவனுக்கும் பாத்தியப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் போலியாக கிரையம் வாங்கியதால் நான் வாங்கிய கிரையம் செல்லாது என்று அறிவித்து, தாவா சொத்துக்களின் இரண்டு அயிட்டங்களையும் 16 பாகங்களாக பிரித்து அதில் 9 பாகங்களை வாதிகளுக்கு பிரித்து கொடுக்கவேண்டும் என்றாலும், வழக்கு செலவு தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.